**O.S.No.16/2024**

வா.சா.2, திரு.சண்முகசாமி
நாள் : 08.04.2026 நேரம் : 12.10 PM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1)தாவா வழக்கு யார் சொத்துகளை பொறுத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் காசீம் வகையறாவின் சொத்துகளை பொறுத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்துகள் மற்றும் இன்னும் பிற சொத்துகள் அனந்தகிருஷ்ண அய்யங்காருக்கு பாத்தியப்பட்டு இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அனந்தகிருஷ்ண அய்யங்காரிடமிருந்து முகமது காசீம், சகினா பீவி ஆகியோர்களின் தகப்பனார் கிரையம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. காசீம் வகையறாவிடமிருந்து தான் கிரையம் பெறப்பட்டது. அசல் வழக்கு எண். 16/1954 க்கு வழக்கை முகமது காசீம் வாதியாகவும், அவரது சகோதரி சகினா பீவி உட்பட பல நபர்கள் வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். அவர்கள் இருவரும் தங்களுக்குள் பாகப்பிரிவினைக்காக வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் அது பற்றி தெரியாது.

2)மேற்படி அசல் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் Estate Under Abolision Act படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் தெரியும். மேற்படி வழக்கில் நானோ, எனது மூதாதையர்களோ கட்சிக்காரர்களாக இல்லை என்றால் சரியல்ல. 19.09.1930 ம் தேதி செய்யது இப்ராகிம், முகமது இப்ராகிம் மற்றும் மேற்படி அசல் வழக்கின் வாதிகள் பாகம் பிரித்தது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி பத்திரத்தில் இந்த நிலம் எங்களுக்கு உழவடைக்கு அளிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த WP No. 360/1951 ன் ஆவணங்கள் என் கைவசம் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி மாண்புமிக

சென்னை உயர்நீதிமன்றத்தில் இனாம் அபாலிசன் ஆக்ட் படி வழக்கு செல்லத்தக்கது அல்ல என்றும், உரிமையியல் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக் கொள்ள உத்தரவிடப்பட்டது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண். 16/1954 வழக்கு நிலுவையில் இருக்கும் போது 3 முதல் 8 பிரதிவாதிகளை கட்சிக்காரர்களாக சேர்க்க சொல்லி மனு செய்து அனுமதிக்கப்பட்டதன் பேரில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டார்கள் என்றால் சரிதான்.

3)மேற்படி வழக்கு நிலுவையில் இருக்கும் போது தரப்பினர்களுக்க இடையே சமரசம் ஏற்பட்டு தீர்ப்பானது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி தீர்ப்பில் என்ன குறிப்பிட்டிருந்து என்றால் தென்புறம் எங்களுக்கு பாத்தியம் என்றும், வடபுறம் அவர்களுக்கு பாத்தியப்பட்டது என்றும் தீர்ப்பானது. நான் குறிப்பிடுவது போல தீர்ப்பில் இல்லை என்றாலும், தவறாக புரிந்து கொண்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி தீர்ப்பில் மேற்படி வழக்கின் வாதியான முகமது காசீம் (வாதி)க்கு வடபகுதி என்றும், சகினா பீவி (2ம் பிரதிவாதி) க்கு தென்பகுதி என்றும் தீர்ப்பானது என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் அந்த வழக்கின் 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கோ, அவர்களது வாரிசுகளுக்கோ எந்த பாத்தியமும் இல்லை என்று தீர்ப்பானது என்றால் சரியல்ல. அந்த வழக்கில் கண்ட வாதியும், 2ம் பிரதிவாதியும் அவர்களின் பாகம் போக மீதமுள்ள இடத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் அரசிற்கு வரி கட்ட வேண்டும் என்று தீர்ப்பானது என்றால் சரியல்ல. மேற்படி வழக்கின் 3 முதல் 5 பிரதிவாதிகள் அந்த வழக்கின் வாதி மற்றும் 2ம் பிரதிவாதியின் அனுபவத்தை தடை செய்யக்கூடாது என்று உத்தரவானது என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் ஏற்பட்ட சமாதான உடன் படிக்கையும், அதில் ஏற்பட்ட தீர்ப்பாணையையும் தாக்கல் செய்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை முழுமையானதாக இல்லை என்றாலும், பல பக்கங்கள் விடுபட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

4)முகமது காசீமோ, சகினா பீவியோ எனது முன்னோர்களுக்கு தாசொத்து

சம்மந்தமாக ஆவணங்கள் எழுதி கொடுத்துள்ளார்களா என்றால் எழுதி கொடுத்துள்ளார்கள். என்ன ஆவணம் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் ஆவணம் எழுதி தரவில்லை. ஆனால் காவந்து (பராமரிப்பு) பண்ணி கொள்ள சொன்னார்கள். தீர்ப்பு ஏற்பட்ட பின்னர் தாவா சொத்து சம்மந்தமாக ஆவணம் எழுதி கொடுத்துள்ளார்களா என்றால் எழுதி கொடுத்துள்ளார்கள். தாவா சொத்து எந்த குரூப்பில் உள்ளது என்றால் மேலக்குளம் குரூப்பில் உள்ளது. எத்தனை பேருக்காக தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் 60 பேருக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளோம். மேற்படி 60 பேரும் தாவா சொத்துக்களை எந்தெந்த பகுதியில் அனுபவம் செய்கிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. நாங்கள் 5 பேர் அனுபவம் செய்வதை மட்டும் குறிப்பிட்டுள்ளோம். நான் அவ்வாறு குறிப்பிடவில்லை என்றாலும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

5)மேற்படி தீர்ப்பில் எங்களுக்கு எதிராக ஏற்பட்ட தீர்ப்பினை எதிர்த்து மேல்முறையீடு செய்துள்ளோமா என்றால் செய்யவில்லை. இந்த வழக்கு தான் தாக்கல் செய்துள்ளோம். நான் குறிப்பிட்டது போல 60 பேருக்காக நாங்கள் 5 பேரும் வழக்கு தாக்கல் செய்ய ஏதாவது சம்மத ஆவணம் ஏற்படுத்தினோமா என்றால் ஏற்படுத்தியுள்ளோம். மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண். 16/1954 வழக்கில் உள்ள 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கும், எங்களுக்கும் உள்ள உறவு முறை நிரூபணம் செய்ய ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வருவாய் ஆவணங்கள் தற்போதைய ஆவணங்கள் என்றாலும், அதற்கு முன்னர் உள்ள ஆவணங்களை என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் என் கைவசம் எனது தாத்தா காலத்தில் ஏற்பட்ட ஆவணங்கள் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.11, 12 ஆவணங்கள் தற்போது வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.13 ஆவணமான தீர்ப்பில் தாவா சொத்து குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல்

செய்த வருவாய் ஆவணங்கள் எதன் அடிப்படையில் பெறப்பட்டது என்றால் எனது தாத்தா மாரியப்ப கோனார் பெயரில் உள்ள ஆவணங்கள் அடிப்படையில் போடப்பட்டது.

6)அசல் வழக்கு எண். 16/1954 ல் ஏற்பட்ட தீர்ப்பில் எங்களுக்கு ஆதரவாக இல்லை என்றாலும், நான் தாக்கல் செய்துள்ள வருவாய் ஆவணங்கள் போலியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. நான் எனது சகாக்களுக்காக உரிமை ஆவணம் இன்றியும், அவர்களின் சம்மதமோ, அனுமதியோ இல்லாமல் வழக்கு தாக்கல் செய்தது ஏற்று கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. நீதிமன்றத்திலிருந்து Order 1 rule 8 ல் அனுப்பபட்ட அறிவிப்பிற்கு என்னிடம் யாராவது ஆட்சேபனை தெரிவித்தார்களா என்றால் இல்லை. தாவா சொத்தின் நான்குமால் அளவுகள் தெரியாது என்றாலும், நான் நிரந்தர அனுபவத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. நான் வடபாதி, தென்பாதி என்று குறிப்பிடாமல் மொத்த சொத்திற்கும் அனுபவம் இல்லாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் முகமது காசீமுக்கும், சகினா பீவிக்கும் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. மாரியப்ப கோனார் மற்றும் முகமது காசீம்க்கு தான் உரிமை உள்ளது. மேற்படி முகமது காசீமோ, சகினா பீவியோ அல்லது அவர்களது வாரிசுதாரர்களோ உரிமை அடிப்படையில் பிறருக்கு கிரையம் கொடுத்ததில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரியல்ல.

7)தாவா சொத்துகளில் எனக்கோ, எனது முன்னோர்களுக்கோ எந்த உரிமையும் இருந்ததில்லை என்றாலும், அவசியமில்லாமல் பிரதிவாதிகளின் பெயரில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. 2 ம் பிரதிவாதிகளும், மற்ற பிரதிவாதிகளும் அவர்களின் பாத்திய அடிப்படையில் 1ம் பிரதிவாதிக்கு பவர்தாரர் என்ற அடிப்படையில் பல நபர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றாலும், மேற்படியாளர்களை இந்த வழக்கில் கட்சிக்காரர்களாக சேர்க்கவில்லை என்றாலும் சரியல்ல. எங்களுக்குள் தாவா சொத்துகளை

பொறுத்து எந்த பாகமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.50PM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2026.04.08 14:17:26 +0530